**தேதி :** 04.11.2025 **SC.No. :** 303/2023 PW **:1** ஜெயக்குமார்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்ததாக கூறப்பட்ட பாதை யாருடையது என்றால் அது பொதுப்பாதையாகும். அந்த பொதுப்பாதைக்கு வடபுறம் என்னுடைய சித்தி தங்கபுஷ்பம் வீடு உள்ளது. கீழ்புறம் எதிரிகளின் வீடு உள்ளது. பாதைக்கு தென்புறமுள்ள தென்னந்தோப்பு எங்களுக்கு உரிமைப்பட்டது. மேற்படி பொதுப்பாதை எனது சித்தி தங்கபுஷ்பத்திற்கும், எதிரிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எதிரிகள் கெட்ட வார்த்தைகளினால் ஏசியதினால், எங்களுக்கு அவமானமோ, அருவருப்போ எற்பட்டதாக புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எதிரி சிறுக்கி மவனே என்று கூறியதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை கெட்ட வார்த்தை சொல்லி ஏசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மிரட்டியதினால் எனக்கு உயிர்பயம் ஏற்பட்டதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என்னை மிரட்ட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இருந்ததாக புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் என்னை கொலை மிரட்டல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. எதிரி என்னை ஒரு வெட்டிற்கு பிறகு திரும்ப வெட்டவில்லை என்றால் சரிதான். எதிரி, என்னை வெட்டும் போது உதவிக்கு யாரையும் அழைக்கவில்லை என்றால் என்னை வெட்டியவுடன் நான் மயக்கமாகி விட்டேன். எனக்கு இரத்தம் பார்த்தவுடன் 30 செகண்ட் மயக்கமாக

இருந்தது. இரத்தம் சட்டையில் பட்டது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் சுமார் 15 நபர்கள் கூடினார்கள். அவர்களை போலீசார் விசாரித்தார்களா? என்றால் எனக்கு தெரியாது. அரிவாளில் இரத்தம் படிந்திருந்தது என்றால் சரிதான். ஊத்துமலை அரசு மருத்துவமனையில் யாரால், எத்தனை நபர்களால், என்ன ஆயுதத்தால் எனக்கு காயம் ஏற்பட்டது என்பது குறித்து நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என்னிடம் இருசக்கரவாகனம் உள்ளது. சம்பவயிடத்திற்கும், ஊத்துமலை காவல்நிலையத்திற்கும் 5 கி.மீ தூரம் உள்ளது. 10 நிமிடத்தில் சென்று விடலாம். எதிரிகளின் பூர்விக ஊர் கலிங்கப்பட்டி என்றால் சரிதான். தங்கபுஷ்பத்தின் வீட்டிற்கு மேல்புறம் பொதுகுடிநீர்த்தொட்டி உள்ளது என்றால் சரிதான். இடையில் ஒரு ரோடு செல்கிறது. தங்கபுஷ்பம் குடும்பத்தாரும், எதிரி குடும்பத்தாரும் அந்த தொட்டியிலிருந்து தண்ணீர் பயன்படுத்துகிறார்கள் என்றால் 15 குடும்பத்தினர்கள் பயன்படுத்துகிறார்கள். தண்ணீர்தொட்டியின் சாவி தங்கபுஷ்பம் கையில் இருக்கும். 3ம் எதிரி சரஸ்வதி தண்ணீர் எடுக்க செல்லும் போது, என்னுடைய சித்தி எதிரிகளின் பூர்விக ஊர் இது இல்லை என்று தண்ணீர் கொடுக்க மறுத்தார் என்றாலும், அதன் மூலம் ஏற்பட்ட முன்விரோதத்தை கொண்டு, என் மூலமாக எதிரிகளுக்கு எதிராக இந்த குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நான் போலீசார் விசாரணையில் கருவந்தாவில் உள்ள இடத்தில் எனது சித்தி கேட் போட்டார், எதிரிகள் கேட் போடக்கூடாது என்று பிரச்சனை செய்தார்கள் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. மாலை 04.00 மணியளவில் எனது சித்தி வீட்டிற்கும், தென்னந்தோப்பிற்குமிடையேயுள்ள ரோட்டில் நானும் சாட்சி தீலிப்,

அனிதா, ராஜேஷ் மற்றும் எனது சித்தி தங்கபுஷ்பம் ஆகியோர்கள் நின்று கொண்டிருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. உனக்கெல்லாம் என்ன மரியாதை சிறுக்கி மவனே, உன்னை உண்டு, இல்லை என்று செய்து விடுவோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. சா.பொ.1 க்கும், காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி காயங்கள் நானும், தீலிப்பும் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது தவறி இடது புறமாக விழுந்ததினால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் பின்யோசனை செய்து, எதிரிகளுக்கு எதிராக புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.05 15:17:22 +0530

**தேதி :** 04.11.2025 **SC.No. :** 303/2023 PW :3 திலீப்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அ.சா.1 எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். எதிரிகள் கருவந்தாவில் உள்ள தெற்கு தெரு என்றால் சரிதான். நான் குடியிருப்பது ராமர் தெரு என்றால் சரியல்ல. எனக்கு சாதாரண காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் "காலையிலிருந்தே பாதை பிரச்சனை சம்பந்தமாக எதிரிகளும், எனது பெரியம்மாவும் சண்டை போட்டு அடிக்க போனார்கள்" என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் " எதிரிகள் அனைவரும் வந்து எங்களைப் பார்த்து "தேவடியா மவனே" என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் "நானும், எனது அண்ணனும் "எதற்காக இப்படி அசிங்கமாக பேசுகிறீர்கள்" என்று கேட்டோம், அப்போது, எதிரி அருள்முருகன் எங்களைப் பார்த்து "அப்படித் தான் பேசுவோம்" என்று சொன்னார்" என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு என்னுடன் எனது சித்தி தெய்வக்கனியும், அம்மாவும் வந்தார்கள். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிந்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் விபரம் கேட்டார்கள் என்றால் சரிதான். அங்கு 4 நாட்கள் நான் சிகிச்சையில் இருந்தேன். என்னுடன், ஜெயக்குமாரும் சிகிச்சையில் இருந்தார். நான் காவல்நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தகவல் சொல்லவில்லை. சா.பொ.1 க்கும், காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் கிடையாது

என்றால் சரியல்ல. மேற்படி காயங்கள் நானும், ஜெயக்குமாரும் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது தவறி இடது புறமாக விழுந்ததினால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் பின்யோசனை செய்து, எதிரிகளுக்கு எதிராக புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கெட்ட வார்த்தை பேசவில்லை என்றாலும், கொலை மிரட்டல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.05 15:17:28 +0530